# புதுவை பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு

## கடத்தப்பட்ட சிலைகள் குறித்த ஆவணங்களை சரிபார்த்தனர்

புதுச்சேரி

புதுச்சேரிக்கு அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று வந்தனர். புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவன அதிகாரிகளை சந்தித்து இந்தியாவில் இருந்து கடத்தி செல்லப்பட்ட நர்த்தன சம்பந்தர், கணபதி உட்பட முக்கிய ஐம்பொன் சிலைகளின் புகைப்பட ஆவணங்களை காண்பித்து சரி பார்த்தனர். சிலைக் கடத்தல் விவகாரத்தில் தகவல்களை பரிமாறிக் கொள்ள இணைந்து செயல்படவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஆயிரக்கணக்கான பாரம்பரிய கோயில்கள் உள்ளன. இவற்றில் அந்த காலத்தில் வடிவமைக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள் மற்றும் கற்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. பல்வேறு கோயில்களில் உள்ள இதுபோன்ற சிலைகளை சிலர் வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்கின்றனர். அந்த கடத்தல் காரர்களை போலீஸார் கண்டு பிடித்து சிலைகளை அவ்வப்போது மீட்கின்றனர். இதற்கு, புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் உதவி முக்கியமான ஒன்றாகும்.

ஏனெனில், தமிழ்நாடு, ஆந்திரம், கேரளா மற்றும் காஷ்மீரில் உள்ள பழமையான கோயில்கள் மற்றும் வட மாநிலங்களில் புகழ்பெற்ற பூரி ஜெகந்நாதர் கோயில் மற்றும் அஜந்தா, எல்லோரா ஆகிய பகுதிகளுக்கு பிரெஞ்சு ஆய்வு நிறுவன குழு சென்று புகைப்பட ஆய்வு நடத்தி வருகிறது. இதன் மூலம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் புகைப்படங்கள் உரிய ஆதாரங்களுடன் இந்த நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள புகைப்படத்தை ஆதாரமாக கொண்டுதான் ஆஸ்திரேலியா நாட்டின் நேஷனல் கேலரியில் தமிழகத்தின் ஸ்ரீ புரந்தன் கிராமத்தில் இருந்து கடத்தப்பட்ட நடராஜர் சிலை, இருப்பது தெரிந்தது. இந்த கோயிலில் இருந்து கடத்தப்பட்ட உமா மகேஸ்வரி சிலை தற்போது சிங்கப்பூர் அருங்காட்சியகத்தில் உள்ளது. இதுபோலவே, அமெரிக்காவில் உள்ள பல்வேறு அருங்காட்சியகங்களிலும் இந்தியாவின் புராதன சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை எந்தெந்த காலக்கட்டத்தில் கடத்தப்பட்டன என்ற எந்த விவரமும் இல்லாத நிலை உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறையைச் சேர்ந்த முதுநிலை பாதுகாப்பு நிபுணர் பிரெண்டன் எம். ஈஸ்டர், பாதுகாப்பு நிபுணர் ஜான்பால் லப்பாட் மற்றும் டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த விசாரணை அலுவலர் ரங்கராஜன் கோபாலன் ஆகியோர் புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்துக்கு நேற்று வந்தனர். அவர்களை பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குநர் பியர் கிராடு, ஆராய்ச்சியாளர் முருகேசன், புகைப்படக் கலைஞர் ரமேஷ்குமார் ஆகியோர் வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் உள்ள சிலைகளின் புகைப்படங்களை நேற்று மாலை வரை அமெரிக்க அதிகாரிகள் ஆய்வு செய்தனர். பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் ஏற்கெனவே பல்வேறு கோயில்களில் வைக்கப்பட்டுள்ள புராதன சிலைகள் குறித்த கணினி மயமாக்கப்பட்ட தகவல் தொகுப்பையும், சிலைகள் விவரத்தையும் அமெரிக்க அதிகாரிகள் பார்த்தனர்.



▲ புதுவை பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தை பார்வையிடும் அமெரிக்க அதிகாரிகள்.